செய்தி வெளியீடு எண்: 058 நாள்: 22.01.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (22.1.2018) சென்னை, சி. கந்தசாமி நாயுடு கல்லூரி வளாகத்தில் பச்சையப்பன் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள அம்மா அரங்கத்தை திறந்து வைத்து, 21 ஜோடிகளுக்கு இலவச திருமணங்களை நடத்தி வைத்து ஆற்றிய உரை

பச்சையப்ப முதலியார் அவர்கள் எளிமை, அன்புள்ளம், கடவுள்பற்று, இரக்க மனப்பான்மை, ஏழையர்க்கு என்றும் இரங்கும் இயல்பு முதலிய குணங்களின் உருவமாக விளங்கி, தம் செல்வத்தையும், செல்வாக்கினையும் எழை எளிய மக்களின் துயரங்களை போக்க தனது செல்வங்கள் அனைத்தையும் மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்தவர் என்பதை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இவர் இளம்வயதில் தந்தையை இழந்த நிலையில், இளம் வயதில் தான் கற்ற கல்வியை ஆதாரமாகக் கொண்டு, 22 வயதிலேயே சென்ற இடங்களில் எல்லாம் சிறந்து விளங்கினார்.

பச்சையப்பன் அறக்கட்டளை மூலம், சென்னை, காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் 6 கல்லூரிகளும், 6 உயர்நிலைப்பள்ளிகளையும் நிறுவி கல்விப்பணியை இன்றுவரை சிறப்பாக செய்து வருவதை நான் மனதார பாராட்டுகிறேன்.

ஒரு நாடு சிறந்து விளங்க கல்வியும், சுகாதாரமும் அவசியமாகும். அந்த வகையில் கல்விக்கு பச்சியப்பன் அறக்கட்டளை ஆற்றும் பணியினை போற்றி, மேலும் அவர்கள் பணிதொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் பச்சியப்பன் அறக்கட்டளை, திருக்கோயில் அறப்பணிகளையும் சிறப்பாக செய்துவருவதை அறிந்து எனது மகிழ்ச்சியினை தெரிவித்து, மேலும் வளர வாழ்த்துகிறேன்.

மார்ச் 1968இல் அறக்கட்டளை நிறுவப்பட்டதற்கான 125 ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சிகளில் கல்லூரியின் பழைய மாணவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மே 1994ம் ஆண்டு இக்கல்லூரியின் 150வது ஆண்டு விழா மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 175வது ஆண்டு விழாவினை சிறப்பாக கொண்டாட வாழ்த்துகிறேன்.

மக்களின் மனதில் நீங்கா இடம் பெறும் வகையில் ஆட்சி செய்தார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

30 மாவட்டங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் நடத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் வருங்காலமாக விளங்கும் பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கி வந்த 2 இணை சீருடையை 4 இணையாக உயர்த்தியும், புத்தகங்கள், கணித உபகரணங்கள், மிதி வண்டிகள் உட்பட பல்வேறு விலையில்லாப் பொருட்களையும், அறிவியல் அறிவு மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கு விலையில்லா மடிக் கணினியும் வழங்கினார்கள்.

தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி, 2வது பசுமைப் புரட்சிக்கு சிறப்பு வேளாண் தொகுப்புத் திட்டம், அதிக அளவில் பால் கொள்முதல் செய்து வெண்மைப் புரட்சி, கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தும் விலையில்லா கறவை மாடுகள், 4 ஆடுகள் வழங்கும் திட்டம், பெண்களின் வேலைப் பளுவினைக் குறைக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களால் தமிழ்நாட்டில் சமூகப் பொருளாதார புரட்சி ஏற்படுத்தியதோடு, பிற மாநிலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுத்தினார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில் பள்ளிக்கல்வி துறைக்கு நிதி ஒதுக்கீடு சுமார் 1 லட்சத்து 37 ஆயிரத்து 261 கோடி ரூபாய் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 1,599 பள்ளிகள் கடந்த 7 ஆண்டுகளில் பல்வேறு நிலைகளில் தரம் உயர்த்தப்பட்டு உள்ளன.

மாணவர் சேர்க்கை தொடக்கக் கல்வி நிலையில் 99.85 சதவீதம், நடுநிலை கல்வியில் 99.20 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவினுடைய 6 ஆண்டு கால ஆட்சியிலே, 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள் என மொத்தம் 65 கல்லூரிகள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக் கழக உறுப்பு கல்லூரிகள், 1 பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை நிறுவியுள்ளது.

இன்று திருமணம் காணும் மணமக்கள் அனைவரும் தங்களது இல்லற வாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, சீரும், சிறப்பாக வாழ்ந்து, மற்றவர்களுக்கு உதாரணமாக பெருவாழ்வு வாழ மனதார வாழ்த்துகிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**